Chundikuli Branch Library


# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 117 இதழ் : 13 02-08-1991 (ஆகஸ்ட் 02—ஆகஸ்ட் 16) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50


### மறைபரப்பு 2000

நற்செய்தி விழுமியங்களை ஒழ்ைதும பரப்புவதும் தமது பணி என்பதை ஆயர்களும் பிற கத்தோலிக்கரும் உணர்ந்து கொள்ள மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் ஒன்றாக 17 தென் ஆசிய ஆயர்கள் இலங்கை, இந்தயா, பங்களாதேஷ் ஆகிய இடங்களிலிருந்து ஜூன் 5 முதல் 12 வரை பெங்களூரில் கூடி மறைபரப்பு ஞான ஒடுக்கத்தில் பங்கு பற்றினர்.

## ஒரே பணியின் இரு தேவைகள்: கலந்துரையாடலும் மறைப்போதகமும்

# குழுவாழ்வு, உருவாக்கல் பணி புரிவோருக்கு புதிய வத்திக்கான் ஏடு வெளியிடப்பட்டுள்ளது

**ஜூன் 20இல் வெளியான புதிய வத்திக்கான் ஏடு மதங்களுக்கிடையேயான கலந்துரையாடலும் யேசுக்கிறிஸ்துவின் நற்செய்திப் போதகமும் ஒரே பணியின் இரு தேவைகள் என்ற கருத்தை வலியுறுத்துகிறது. இவ் ஏடு பற்றிக் கூறிய கருதினால் ரொய்கோ "குழுவாழ்வு, உருவாக்கப்பணி புரிவோருக்கு இவ் ஏடு பெரிதும உதவும்" என்றார்.**

மதங்களுக்கிடையே கலந்துரையாடலுக்கான திருத்தந்தையின் சபையும் மறைபரப்புச் சபையும் இணைந்து கலந்துரையாடலும் போதகமும் திருச்சபையின் ஒரே பணியின் இரு தேவைகள் என்ற கருத்தை வலியுறுத்தி ஒரு ஏட்டினை வெளியிட்டுள்ளன.

திருச்சபை மதங்களுக்கிடையே கலந்துரையாடலை ஊக்குவித்தால் யேசுவின் மீட்பின் நற்செய்தி போதிக்கப்படத் தேவையில்லையா?


அல்லது திருச்சபை யேசுக்கிறிஸ்துவை அறிவிப்பதில் கருத்தாயிருந்து, ஞானஸ்நானம் பெறுவதன் மூலம்தான் மீட்பு உண்டு என்று கருதினால் கலந்துரையாடல் பொருளற்றதா?

அல்லது இரண்டு பணிகளுமே தனித்துவமானவையா? என்ற மூன்று வினாக்களுக்கும் விடைபகர்வதாக இப் புதிய ஏடு வெளிவந்துள்ளது.

## கத்தோலிக்க பாடசாலைகள் கிறிஸ்துவுக்கு சான்று பகர்கின்றன

கத்தோலிக்க பாடசாலைகள் கிறிஸ்துவுக்கு சான்று பகர திருச்சபைக்குத் துணை புரிகின்றது. ஆனால் அவை மதம் மாற்றும் கருவிகள் அல்ல என்று வட ஜகத்தாவிலுள்ள ஒரு பாலர் பாடசாலையின் அதிபரான சகோதரி யுஸ்வித்தா கூறியுள்ளார். தமது பாடசாலையில் சேரும் போது கத்தோலிக்கருக்கு முதலிடம் அளிக்கப்பட்டாலும் அங்குள்ள மாணவரில் அறுபது வீதமானோர் பிறமதத்தவர்கள் என்றும் அவர்களைக் கத்தோலிக்கராக்குவதற்கு எந்த முயற்சியும் எடுக்கப்படுவதில்லை என்றும் கூறிய அவர் எல்லாப் பிள்ளைகளுக்கும் கத்தோலிக்க சமய பாடம் கற்பிக்கப்படுகிறதென்றும் அப்பிள்ளைகளில் பலர் தானே விரும்பி ஞானஸ்ஞானம் பெற்றுள்ளனர் என்றும் கூறினார்.

## கிளரிசியன் சபையின் குரு



கிளரிசியன் சபையைச் சேர்ந்த அருள்திரு. A. M. கிருபானந்தன், CMF கடந்த வைகாசி 10 ஆம் நாள் மாலை வெள்ளவத்தை புனித லோறன்ஸ் ஆலயத்தில் குருவாக பேரருள்திரு ஒஸ்வஸ்ட் கோமிஸ் ஆண்டகை அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டார்.

அருள்திரு. கிருபானந்தன், யாழ். பேராலய பங்கைச் சேர்ந்த காலம் சென்ற திரு. அல்பிரெட், திருமதி. பொன்மணி அல்பிரெட் ஆகியோருக்கு எட்டாவது பிள்ளையாகப் பிறந்தார். ஆரம்பக் கல்வியை யாழ். டொன் பொஸ்கோ பள்ளியிலும் பின்பு யாழ். சம்பத்திரிசியார், மத்திய கல்லூரிகளிலும் பயின்ற பின் கிளரிசியன் சபை குருவாக விருப்பம் கொண்டு, இந்தியா, மதுரை மாவட்டம் கருமாத்தூரிலுள்ள கிளாரட் பவனில் 1979 ஆம் ஆண்டு சேர்ந்தார். பெங்களூரில் உள்ள கிளரிசியன் நவசந்நியாச மடத்தில் நவசந்நியாசத்தை முடித்து முதல் வார்த்தைப்பாட்டை வைகாசி 31, 1982 இல் அளித்தார். கருமாத்தூர் அருள் ஆனந்தர் கல்லூரியில் மெய்யியல் கற்றார்.

இரண்டு ஆருடம் இறையியலை பெங்களூர் புனித இராயப்பர் குருமடத்தில் பயின்ற பின் பிலிப்பைன்ஸ் மணிலாவில் உள்ள கிளாரட் குருமடத்தில் இருந்து புனித வின்சென்ட் குருமடத்தில் கடைசி இரு வருட இறையியல் கல்வியை நிறைவு செய்தார்.

## ஜப்பானில் தீண்டாமை

ஓசாக்கா மறைமாவட்டத்தில் கத்தோலிக்கரிடையே ஓர் ஆய்வு நடத்தப்பட்டபோது அவர்களுள் கிட்டத்தட்ட அரைவாசிப்பேர் தமது பிள்ளைகள் 'புறக்குமின்' (தாழ்த்ப்பட்டோர்) பிரிவைச் சேர்ந்தவர்களை மணப்பதை விரும்பவில்லை எனத் தெரிவித்தனர்.

புறக்குமின் பிரிவினர் ஏனைய ஜப்பானியரைப் போன்ற வம்சாவளியினராயினும் கசாப்பு, தோல் பதனிடுதல் போன்ற தொழில்களைச் செய்வதனால் அசுத்தமானவர் எனக் கருதப்படுகின்றனர். ஏறக்குறைய மூன்று மில்லியன் புறக்குமின்கள் தனித்து குழுக்களாக வாழ்கின்றனர். தமது தொழிலை மாற்றவோ, இருப்பிடத்தை மாற்றவோ அவர்களுக்கு அதிக வாய்ப்புக்கள் இல்லை.

## போதிய திருப்பணியாளர் இல்லாதபோதிலும் பிறநாடுகளுக்கு மறைப்பணியாளர்

பிலிப்பைன் நாட்டில் உள்ள கத்தோலிக்க மக்களுக்குப் பணிபுரிய போதிய திருப்பணியாளர் இல்லாதிருந்தபோதிலும் அங்கிருந்து பிறநாடுகளுக்கு மறைப்பணியாளர் அனுப்பப்படுகின்றனர்.

கிறிஸ்தவம் ஆசியாவில் ஒரு சிறுபான்மை சமயமாக இருந்த போதிலும் பிலிப்பைன் நாட்டின் 66 மில்லியன் மக்களில் 85% வீதமானோர் கத்தோலிக்கர். எனவே அசியாவில் நற்செய்தி அறிவிப்பது தனது கடமையென அது கருதுகின்றது. திருத்தந்தை 1981 இல் அந்நாட்டுக்கு வருகை தந்த போது அவர் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

இன்று சுமார் 900 மறைப் பணியாளர் பிறநாடுகளில் பணிபுரிவதாக அறியப்படுகிறது. மே 20 ஆம் திகதி கருதினால் சின் மேலும் 50 மறைப்பணியாளரை ஆசியா, ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா போன்ற இடங்களுக்கு அனுப்பிவைத்தார்.

இவர்கள் போகுமுன் பிற நாடுகளிலிருந்து திரும்பிய அனுபவம்பெற்ற மறைப்பணியாளர்களுடன் உரையாடியதோடு ஒரு விசேடபயிற்சி நெறியையும் மேற்கொண்டனர் பிறமதங்களோடு உரையாடல், கலாசார பரிமாற்றம், பண்பாட்டுமயமாக்குதல். மொழிகள் கற்றல், புதிய சூழலில் ஆன்மீகம் போன்றவற்றில் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

## நூற்றாண்டு விழா

சென்ற புதன்கிழமை ஜூலை 31 ஆம் திகதி யேசு சபையை நிறுவிய புனித லேயலா இஞ்ஞாசியாரின் பிறப்பின் 500 வது ஆண்டு நிறைவு நாளாகும். 1540 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 27 ஆம் நாள் புனித இஞ்ஞாசியாரால் ஆரம்பிக்கப்பட்ட யேசு சபையானது கடந்த 450 ஆண்டுகளாக உலகெங்கும் அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளது.

யேசு சபையினரின் வாழ்வையும் பணியையும் கௌரவிக்கும் முகமாக திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் சென்ற ஆண்டு செப்ரெம்பர் 27 முதல் இவ்வாண்டு ஜூலை 31 வரையிலான நாட்களை நூற்றாண்டுவிழாக் காலமாகப் பிரகடனப்படுத்தியிருந்தார்.

யேசு சபையின் ஸ்தாபகர் புனித இஞ்ஞாசியாரின் நண்பரும், சகவாளியுமாகிய புனித பிரான்சிஸ்கு சவேரியார் நமது மண்ணிலும் மறை போதகப் பணியில் ஈடுபட்டார் என வரலாறு கூறுகிறது.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம்கருத்து

### யேசு சபை

மறுமலர்ச்சிக் காலத்திலே திருச்சபை எதிர்கொண்ட பல்வேறு சவால்களுக்குத் துணிவுடன் முகங்கொடுத்து, விசுவாசத்தைக் காத்து, வளர்த்த பெருமை யேசு சபையினரையே சாரும். ஆசிய நாடுகளில் திருமறை பரவுவதற்கு யேசு சபையினரே முக்கிய பங்காற்றினர்.

1623 இல் யாழ்ப்பாணத்திற்கு வந்த யேசுசபையினர் பதினாறு பணித்தளங்களை அமைத்து மக்களுக்கு ஞானக் கடமைகளை நிறைவேற்றியிருக்கின்றனர். அதேகாலத்தில் இன்னும் பதினெட்டு பணித்தளங்கள் பிரான்சிஸ்கன் சபையினரால் நிர்வகிக்கப்பட்டு வந்தன. மொத்தம் 34 பங்குகளும் அவற்றுடன் இணைக்கப்பட்ட ஆலயங்களும் பாடசாலைகளும் கத்தோலிக்க மத குருக்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தன.

1658 ஜூன் 22 வரை போர்த்துக்கேயரின் ஆட்சியில் திருமறையைப் பின்பற்றிய மக்கள், ஒல்லாந்தர் யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றிய பின் ஒல்லாந்தருக்கு அஞ்சி வாழவேண்டியிருந்தது. கத்தோலிக்க, ஆலயங்கள், பாடசாலைகள் எல்லாம் ஒல்லாந்தரால் மறுமலர்ச்சியாளரின் ஆலயங்களாகவும் பாடசாலைகளாகவும் மாற்றப்பட்டன.

1687 இல் யோசவ் வாஸ் முனிவர் டச்சு அடிமை வேடம் பூண்டு கோவாவில் இருந்து வந்து விசுவாசத்தைத் திடப்படுத்தி வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். ஒறற்ரோறியன் குருக்கள் யாழ்ப்பாணத்தில் பணி புரியத் தொடங்கினர். யேசுசபையினர் திருமலை, மட்டுநகர் பகுதிகளைத் தமது பணித்தளமாக்கிக் கொண்டனர்.

1847 முதல் அமலமரித் தியாகிகள் யாழ்ப்பாணத்தில் திருமறையைப் போதிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத் திருச்சபை வரலாற்றில் யேசுசபைக் குருக்களின் பணி 1623 முதல் 1658 வரை சிறப்பாக அமைந்திருந்தது என்று கூறலாம்.

பிரான்சிஸ்கன் சபைக்குருக்களோடு இணைந்து போத்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில், ஆட்சியின் செல்வாக்கைப் பயன்படுத்தி 25 ஆண்டுகள் இவர்கள் பணி ஆற்றினர்.

தொடர்ந்து 30 ஆண்டுகளுக்குமேல் சத்தியமறை தடைசெய்யப்பட்டிருந்த போதிலும், தமது விசுவாசத்தை அழியவிடாது பாதுகாத்துக் கொள்ளும் அளவுக்கு மக்களை இவர்கள் உறுதிப்படுத்தியிருந்தார்கள். முப்பது ஆண்டுகளுக்குப்பின் யோசவ் வாஸ் முனிவர் வந்தபோது இன்னமும் கத்தோலிக்க விசுவாசம் மக்களிடையே அழிந்துவிடாதிருப்பதைக் கண்டார்.

அக்காலத்தில் வாழ்ந்த கத்தோலிக்கர் ஒல்லாந்தரின் அதிகாரிகளுக்குத் தெரியாமல் மறைவாக தமது வழிபாடுகளை அமைத்து, தமது ஞானக்கடமைகளைச் செய்து வருமளவுக்கு அந்த மக்களுடைய விசுவாசம் ஆழமாக வேரூன்றி இருந்தது.

இத்தகைய விசுவாச வித்தை விதைத்து வளர்த்த யேசுசபையினரை நாம் மறத்தலாகாது.

ஒல்லாந்தர் யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றி யாழ்ப்பாணத்தில் ஆட்சியை நிலை நாட்டிய போது அரசியல் சதிகளில் ஈடுபட்டதாக பல கத்தோலிக்கர் பொய்க்குற்றம் சாட்டப்பட்டுக் கொல்லப்பட்டனர். யேசுசபைக் குருவாகிய பிதா கல்தெய்ரோ (Caldeiro) பாவசங்கீர்த்தன உண்மையை வெளியிட மறுத்ததற்காக வேதசாட்சி மரணத்தைத் தழுவ வேண்டியிருந்தது.

இத்தகைய விசுவாச சாட்சியம் பகர்ந்த யேசு சபையினரை நினைவுகூர்ந்து மக்கள் அறியச் செய்வதும், அவர்கள் வேத சாட்சியம் பகர்ந்தமைக்காக பாராட்டும் கௌரவமும் செலுத்துவதும் நமது கடமையாகும்.

# போர்த்துக்கேயர் காலத்தில் யாழ்குடாவில் யேசுசபையின் பணி

## யேசுசபை ஸ்தாபகரின் பிறப்பின் 500-ம் ஆண்டு நிறைவு 31-7-1991

இலங்கையில் கத்தோலிக்க மறைக்கு வித்திட்டு அதைப் பரப்பியவர் போர்த்துக்கேயர். 1505 ஆம் ஆண்டு இலங்கைக்கு முதல் முதல் போத்துக்கேயர் வந்தனர். இவ்வேளையில் போத்துக்கல் படையினரின் ஆன்ம குருவாக வின்சன்றி என்ற பிரான்சிஸ்கன் சபை குருவானவர் வந்திருந்தார். கோட்டைமன்னன் புவனேகபாகுவும் போத்துக்கல் மன்னனும் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி 1543 ஆம் ஆண்டு 6 பிரான்சிஸ்கன்சபை குருமார் மறைபரப்பாளராக இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். யேசு சபைக் குருமார் 1602 ஆம் ஆண்டு விசுவாசப் பரம்புதல் சபையின் வேண்டுகோளின்படி இலங்கையில் மறைபரப்பு பணியை ஆரம்பித்தனர்.

1623 ஆம் ஆண்டு யேசு சபை குருமார் யாழ்ப்பாணத்தில் மறைபரப்புப்பணியைத் தொடங்கினர். யாழ்க் குடாவின் கரையோரப் பகுதியில் பிரான்சிஸ்கன் சபை குருமார் பணியாற்ற, குடாவின் உட்பகுதியில் யேசு சபைக் குருமார் பணியாற்றினர். 1629 ஆம் ஆண்டு குடாநாட்டில் 16 நிலையங்கள் யேசு சபைக் குருமாரின் பணித்தளங்களாக விளங்கின. இந் நிலையங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு குருவானவர் தங்கி இருந்து பணிபுரிந்தார். போத்துக்கல் மன்னனின் ஆளுனனாக யாழ்ப்பாணத்தில் நிர்வாகம் செய்தவன் பிலிப்புடி ஒலிவேரா என்பவன். இவன் மதப் பரம்பலுக்கு பல வகையிலும் ஊக்கமளித்து உதவி செய்தான். இக்காலத்தில் இலங்கைத் திருச்சபை நிர்வாகம் கொச்சின் ஆயரின் பொறுப்பில் இருந்தது.

இயேசு சபைக்குருமார் தமிழ் மொழியை நன்கு கற்றிருந்த படியால், மக்களுக்கு சிறந்த முறையிலே மறை அறிவை அளிக்கக் கூடியதாக இருந்தது. முக்கிய செபங்கள், 10 கற்பனைகள், திருச்சபையின் கற்பனைகள், கிறிஸ்தவ ஒழுங்கு முறைகள் பற்றி போதிய அறிவு பெற்றவர்களுக்கே திருமுழுக்களித்தனர்.

குடாநாட்டில் இயேசு சபைக் குருமாரின் பணிமையங்கள், பளை, முகமாலை, அச்சுவேலி, தெல்லிப்பளை, மல்லாகம், பண்டத்தரிப்பு, சங்கானை, வட்டுக்கோட்டை, காரைதீவு, போன்ற இடங்களில் ஆலயங்களுடன் அமைந்திருந்தன. ஆளுனன் ஒலிவேரா யாழ். நகரத்தில் ஓா ஆலயத்தையும், பாடசாலையையும் கட்டி இயேசு சபைக் குருமாருக்கு உதவி அளித்தான்.

மறைபரப்பு பணியின்போது யேசுசபைக்குருமார் முக்கியமாக இரண்டு வழிவகைகளைக் கையாண்டனர். 1) கல்வி அறிவை அளிப்பதன் மூலம் மறை அறிவை அளிப்பது. 2) நாடகங்கள் மூலம் மறை அறிவை வளர்ப்பது. பிலிப்பு பல்தேயுஸ் என்கின்ற ஒல்லாந்த சீர்திருத்த மதபோதகர் தமது நூலில் யேசு சபையைப்பற்றிக் குறிப்பிடும்போது, யேசு சபைக் குருமாரின் பணியையும் முறையையும் பாராட்டித்தாமும் இவர்களின் பணிமுறையையே பின்பற்ற விரும்புவதாகக் கூறுகின்றார்.

இன்னும் இவர்கள் பணியின் பயனாக, இவர்களின் வழிகாட்டுதலில் தோற்றம் பெற்ற புனித யாகப்பர் அம்மானை, ஞானப்பள்ளு, தமிழ் நாடகங்கள், செபங்கள் என்பன தமிழ்க் கத்தோலிக்க இலக்கியத்திற்கு இவர்கள் ஆற்றிய சிறந்தபணியாகும்.

இவர்கள் பணிக்காலத்தில் பலசோதனைகளையும் மேற்கொள்ளவேண்டி இருந்தது. முக்கியமாக 1627 ஆம் ஆண்டு வீசிய புயலினால் இவர்கள் ஆலயங்கள், பணி மனைகள் பல அழிக்கப்பட்டன. அதே ஆண்டில் இடம் பெற்ற ஒலிவேர என்ற ஆளுனனின் மரணம் அரசிடம் இருந்து கிடைத்த உதவிகளையும், ஊக்கத்தையும் பாதித்தது. 1628 ஆம் ஆண்டு இடம் பெற்ற கண்டி அரசனின் படையெடுப்பினால் பல குருமார் கொலை செய்யப்பட்டு, ஆலயங்களும் அழிக்கப்பட்டன.

இத்தனை சோதனைகளின் மத்தியிலும் நற்செய்திப் பணியை யேசு சபைக்குருமார் சிறப்புடன் ஆற்றி வந்தனர். ஆனால் இறுதியாகஒல்லாந்தர் படையெடுப்பின் விளைவாக யாழ்ப்பாணம் 1658 ஆம் ஆண்டு, ஒல்லாந்தர் கையில் வீழ்ந்ததோடு யாழ்ப்பாணத்தில் யேசுசபைக் குருமாரின் மறைபரப்பு பணியும் முடிவு பெற்றது. ஒல்லாந்தரின் பல சோதனைகள் மத்தியிலும் மக்களின் விசுவாசம் நிலைத்து நின்றது என்றால், போத்துக்கேய குருமார் அளித்த ஆழமான விசுவாசமும் ஒரு முக்கிய காரணமாகும்.

அருள்திரு.
ஞா. விக்ரர் பிலேந்திரன்

Chundikuli Branch Library

# மறைப்பணிக்கு மனவுறுதி தேவை

ஒரு தனி நபரோடு, ஒரு குடும்பத்தோடு நாம் ஏற்ற ஈடுபாட்டை அகலப்படுத்தி எல்லா மனிதர்களோடும் நம்மை ஈடுபடுத்தும்போது மறைப்பணிக்கு முதல் வார்த்தைப்பாடு கொடுத்தவர்களாகின்றோம். மறைப்பணி என்பது பிறர் நல்வாழ்வில் ஈடுபடுவது. இறைமகன் இயேசு அறிவித்த நல்வாழ்வுத்திட்டத்தை உலகின் நான்கு திக்குகளுக்கும் எடுத்துச்செல்வதே அது.

உலகிலே அரும்பெரும் காரியங்களைச் சாதித்தவர்கள் எல்லாம் மனவுறுதி கொண்டவர்களே. திக்கு வாயுடன் பிறந்த தெமாஸ்தனிஸ் சிறந்த பேச்சாளரானது எதனால்? சாக்ரடீஸ் விஷத்தைக் குடிக்கத் தயங்காதது எதனால்? காந்தி சிறைவாசம் செய்யத் தயங்காதது எதனால்? பார்வையற்ற ஹெலன் கெல்லர் பார்புகழ் எழுத்தாளரானது [illegible]னால்?... ஒரே பதில்! மனவலிமை செவியில்லாதிருந்தும் சங்கீதத்தைப் பாடினார் பீத் ஓவன். கண்ணில்லாதிருந்தும் காவியத்தைப் படைத்தார் மில்டன்.

புனிதர்களின் வாழ்க்கையெல்லாம் இந்த மனவலிமைக்குச் சான்றுகள். வாளையும் தீச்சூளையையும் எப்படி ஏற்றாள் இளம் மாது அந்சேசாள்? வீட்டையும், நாட்டையும் விட்டு இந்திய நாட்டிலே பசியிலும், பட்டினியிலும் வீதி வீதியாய் எப்படி நடந்தார் சவேரியார்?

வரலாற்றை எழுதியவர்களும் அதை மாற்றியவர்களும் மனவலிமை கொண்டவர்களே. தோல்வியை வெற்றியாக்கியவர்கள்: கடனை வருமானமாக்கியவர்கள்: நஷ்டத்தை இலாபமாக்கியவர்கள்:

மறைப்பணியில் ஈடுபட்டுள்ள சகோதர சகோதரியே! நீயும் அரும்பெருங்காரியங்களைச் சாதிக்கலாம், இந்த மனவலிமை மட்டும் உன்னிடம் இருக்குமேயாகில் கோடை வெப்பத்தில் புல் காய்கிறது, மலர் வாடுகிறது, மெழுகு உருகுகிறது. ஆனால் வேம்பு காய்கிறதில்லை, வாழை வாடுவதில்லை, இரும்பு உருகுவதில்லை. காற்று வீசும்போது பஞ்சு பறக்கிறது. ஆனால் மலை அசைவதில்லை. உனது மனவலிமை பஞ்சா?... இரும்பா? ...சிந்தி...

மூன்று கப்பலிலே கிறிஸ்தோபர் கொலம்பஸ் புது உலகைக் கண்டுபிடிக்க புறப்பட்டார். புயல் அடித்தது. கடல் கொந்தளித்தது. கப்பல் தக்கைபோல் தண்ணீரிலே தடுமாறிற்று. உணவு தீர்ந்தது. குடிநீர் குறைந்தது. மாலுமிகள் செல்ல மறுத்தனர். 'வீடு திரும்பு' என்றனர்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

வீட்டுக்கொரு பாதுகாவலன் • உங்கள்பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

Chandikuli Branch



# நல் மனையாளின் பண்புகள்

''மனைவி என்பவள் இளமைப் பருவத்தில் காதலியாகவும், நடுத்தரப் பருவத்தில் வாழ்க்கைத் துணைவியாகவும், வயோதிபப் பருவத்தில் பணிப்பெண்ணாகவும் விளங்குகின்றாள்'' என்று பிரான்சிஸ் பேகன் என்ற அறிஞர் கூறுகின்றார்.

இவள் வீட்டுக்குடையவள் ஆதலால் இல்லாள் எனப்படுகிறாள். கணவனிடம் மிகுந்த அன்பு செலுத்துவதால் இவள் காதலியாகின்றாள். குடும்பச் சுமைகளை மனமுவந்து ஏற்றுக் கொள்வதால் பணியாள் எனப்படுகின்றாள். இப்படி நல்லறம் செய்யும் இல்லறத்தாளுக்கென்று சில அடிப்படைப் பண்புகள் இருக்கின்றன. அவையாவன அன்பு, பொறுமை, விவேகம், பணிவு, இறைபக்தி என்பன.

இல்லறம் நடத்தும் நல் மனையாள் அன்பு என்ற நற்பண்பைத் தன்னகத்தே கொண்டிருத்தல் சாலச் சிறந்தது. மனைவி தனது கணவனையும், பிள்ளைகளையும் அன்பு செய்ய வேண்டும். ஏனெனில், அவள்தான் அந்தக் குடும்பத்தின் அகல்விளக்காகத் திகழுகின்றவள் அவள்தான் குடும்பம் என்ற பாரீய இயந்திரத்தை இயக்கும் முக்கிய கருவியாக இருக்கின்றாள். எனவே அவளின் உள்ளத்திலே அன்பு மலர வேண்டும்.

திருமணம் என்ற பிணைப்பிலே இணைந்து விட்டால், கணவன் தன் மனைவியைத் தான் தனது தாயாக- வாழ்க்கை துணையாக ஏற்றுக் கொள்ளுகின்றான். தாய் என்றால், அன்புக்கும், பாசத்திற்கும் இருப்பிடம். எனவே மனைவி தனது கணவனை அன்பு செய்ய வேண்டும். அவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும், தன்னை, தனது இல்லற வாழ்க்கைக்குத் துணைவியாக— தனது குறைநிறைகளோடு ஏற்றுக் கொண்ட அந்த பெருந்தன்மைக்காக, அவனை அன்பு செய்ய வேண்டும். இவர்களின் இந்த அன்புறவிலே மலர்ந்து மணம் வீசும் குழந்தைச் செல்வங்களை நல்முறையில் வழி நடத்தவும், அவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கும் கடமைப்பாட்டையும் மனையாள் பெற்றிருக்கின்றாள்.

இல்லறத்தை நல்லறமாக்க இல்லாளுக்கு பொறுமை என்ற ஆயுதம் தேவை. பொறுமை இல்லாவிடின் தனது இல்லற வாழ்க்கையில் பல பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். குடும்பத்தில் தனக்கும் கணவனுக்கும், தனக்கும் பிள்ளைகளுக்குமிடையே ஏற்படுகின்ற முரண்பாடுகள், கருத்து வேறுபாடுகள் போன்றவற்றை சமாளிக்க பொறுமை என்ற பண்பு அவசியம் தேவை.

மனைவி என்பவள் குடும்பத்தில் முக்கியமான ஓர் அங்கத்தவள் அவள் தனது குடும்ப நலனுக்காகவும், வளர்ச்சிக்காகவும், நாளாந்தம் உழைப்பவள். எனவே அவள் கணவன், பிள்ளைகள் விடும் தவறுகளை கண்டும் காணாதவள்போல இருக்க முடியாது. அவற்றைத் தகுந்தவேளையில் சுட்டிக்காட்டித்திருத்தவேண்டும். குழந்தைகளாயின் அவ்வப்போதே தண்டித்தோ அல்லது புத்திமதிகள் கூறியோ திருத்துதல் வேண்டும். கணவனாயின் அவனுக்கு தகுந்த நேரத்தில், தகுந்த விதத்தில் அவனது தவறுகளை எடுத்துக்காட்ட வேண்டும். இதற்கு விவேகம் அவசியம் தேவை. இன்னும் பெரும்பான்மையான குடும்பங்களில் குடும்ப நிர்வாகத்தை பரிபாலிக்கும் பொறுப்பு இல்லாளிடமே இருக்கின்றது. எனவே அவள் விவேகத்துடன் செயற்பட வேண்டும்.

மனைவி தனது கணவனுக்குப் பணிந்து நடக்கவேண்டும். ஏனெனில் கிறிஸ்து திருச்சபைக்கு தலையாக இருப்பது போல் கணவன் மனைவிக்கு தலையாய் இருக்கின்றான். எனவே மனைவி அனைத்திலும் கணவனுக்கு பணிந்திருத்தல் வேண்டும். கணவன்தான் மனைவிக்கு ''கண் கண்ட தெய்வம்.'' எனவே தான் பொய்யாமொழிப்புலவன் திருவள்ளுவர்,

''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள்
பெய் எனப் பெய்யும் மழை''

பிறதெய்வங்களை வணங்காது தன் கணவனையே தெய்வமாக வணங்கும் இல்லாள் பெய் என்று கூறினால் மழையும் பெய்யும் என்று கூறினார்.

எனவே மனைவி தன்னை அன்பு செய்கின்ற கணவனை எவ்வாறு மதித்து நடக்க வேண்டுமென்பது தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டப் படுகின்றது. மனைவியானவள்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

செ. றொபின்சன் ஜோ
யாழ்ப்பாணம்.

# முதல் பரிசு




காலைநேரம். புள்ளினங்கள் சிறகடித்துப் பறக்கும் நேரம். சுபோதினி தன் எண்ணப்பறவைகளை சிறகடித்துப் பறக்க விட்டு எழுதிக் கொண்டிருந்தாள்.

''என்னடி எழுதுறாய் காலத்தால'' ''நான் அம்மா இந்தப் பாதுகாவலனுக்கு கதை எழுதுறன், அதில ஒரு சிறுகதைப் போட்டி எண்டு போட்டிருக்காங்க. அதுக்குத்தான் சும்மா எழுதிப் பாப்பமெண்டு ..... '' இழுத்தாள் சுபோதினி.

கதையும் கத்தரிக்காயும். படிப்பின்ர திறமையில் அவளுக்கு ஒரு கதை'' கிழித்தெறிந்தாள் சித்தி. சுபோனினிக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. ''என்ன செய்வம்?, நான் செய்த பாவத்துக்குத்தான் இந்தப் பரிகாரம்'' தன்னைத்தானே தேற்றிக் கொண்டாள்.

வழமையாக அவர்கள் இரவு குடும்ப செபமாலை சொல்லும் போது நற்செய்தி வாசிப்பது வழக்கம், அன்றும் அவள் நற்செய்தியை திறந்த போது ''எவனும் விளக்கை ஏற்றி நில வறையிலோ, மரக்காலின் கீழோ வைப்பதில்லை. மாறாக உள்ளே வருவோரெல்லாரும் வெளிச்சத்தைக் காணும்படி விளக்குத் தண்டின் மீது வைக்கிறான் .........'' என்ற வாசகங்கள் அவளுக்கு ஒரு புது உற்சாகத்தைக் கொடுத்தன. ''சித்தி என்ன கத்தினாலும் அவவுக்குத் தெரியாமலாகிலும் கதை எழுதி அனுப்பத்தான் வேணும்'', உறுதி பூண்டாள் சுபோதினி.

நாட்கள் நகர்ந்தன. அன்று பாதுகாவலனில் சிறுகதைப் போட்டி முடிவுகள் வெளியாவதாக இருந்தன. பரபரப்புடன் திறந்த சுபோதினிக்கு முதலாம்பரிசு. அந்தோனிப்பிள்ளை சுபோதினி இளவாலை என்று கண்டதும் மட்டற்ற மகிழ்ச்சி. அவளின் வாழ்வு துன்பமாக இருந்தாலும் அன்றைய நாள் இன்பமாகத்தான் இருந்தது

''கடவுள் தந்த இந்த ஆற்றலை நான் என்னுள்ளே மாத்திரம் வைத்திராமல் வெளியுலகுக்கு கொணர்ந்து விட்டேன்'' விளக்கின் ஒளியை எல்லோரும் காணும்படி தண்டின் மீது ஏற்றி விட்டேன்'' என்ற மகிழ்ச்சியில் அன்றைய மாலைத் திருப்பலியை நன்றித் திருப்பலியாக கடவுளுக்கு ஒப்புக் கொடுத்தாள் சுபோதினி.

A. எமில் சுதாகர், காவலூர்.

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 5<br>சுடர்: 1 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

**என்னகம் : 1**

அன்புநிறை கண்மணிகாள்!

ஓராண்டின் பின் உங்களுடன் தொடர்புகொள்ள சந்தர்ப்பம் தந்த எளிமை நிறை பாலன் யேசுவுக்கு நன்றிகள் பல.

இன்றைய சிறுவர்களாகிய நீங்கள் நாளைய மனிதர்! தலைவர்!! என்பதை மீண்டும் நினைவு கூருங்கள்.

நாளைய உலகின் நல்லதோர் குடிமகனாக மட்டுமன்றி நித்திய உலகின் சத்திய மகனாக, சின்ன யேசுவின் வாரிசாக மாறவேண்டுமென்ற நோக்குடன் வரும் 'காவலன் கண்மணிகள்' உங்கள் கையில் தங்கியுள்ளார்.

கடந்த நான்கு ஆண்டுகளில் நீங்கள் தந்த அன்புக்கரத்தால், ஆக்கங்கள் பலகண்டு கண்மணிகள் பலன் பெற்றனர், பலமும் பெற்றனர்.

அழிவினூடாக ஆக்கம் பெறக் கற்றுத்தந்த இறை யேசுவின் பாதையில் சென்று பலம் பெறுவோம்.

அடுத்துவரும் இதழில் மீண்டும் சந்திப்போம்.

வணக்கம்.

உங்கள் அன்பின்
அன்பு விழி

★

### அங்கத்துவம்

| | | | |
|---|---|---|---|
| 289. | எ. பி. பெனடிக்ற் | 11 | புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம். |
| 290. | M. சில்வேஸ்ரர் | 11 | புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம். |

★

### உனது அறிவுரை யாதோ?

அன்புப் பாலா அருமை யேசுவே
பண்பும் பணிவும் உள்ளவரே
தொழுவம் தன்னில் உதித்தவரே
தொழுதேன் உன்னை வணங்கியே
நாளை மலரும் மொட்டுக்கள்
நாங்கள் மனித சிட்டுக்கள்
எங்கள் வாழ்வு முத்துக்கள்
என்றும் உன் சொத்துக்கள்
கேள்வி ஒன்று வந்ததுவே
ஆள்வீர் எம்மை அரசாயே
அஞ்சும் பிஞ்சு உளத்திற்கு
அன்பன் உனது அறிவுரை என்ன?

D. E. ரட்ணராஜ்
அ. எ. 65

★

### சோராதே மனமே

சோராதே மனமே — இந்த
தொல்லைகள் நிறைந்த உலகிலே
துன்பங்கள் உன்னை
துவழ வைப்பினும்,
தொடர்கின்ற சோர்வுகள் — உனக்கு
தொல்லைகளைக் கொடுத்திடினும்,
வளரும் வாழ்க்கையில்
வற்றாத குறைகள் வந்திடினும்
தேடிய சொந்தபந்தங்கள்
தேய்ந்து போயிடினும்
நட்பினால் பெற்ற நண்பர்கள்
நலிவு பெற்றிடினும்
வெள்ளை உடையணிந்த கொள்ளை உள்ளங்கள்
குரோதங்கள் செய்திடினும்
வளர்ந்து வரும் போர், பூசல்கள்
எட்டி வதைத்திடினும்
சத்திய போதனையில்
சோதனைகள், வேதனைகள் சந்தித்திடினும்
தளராதே மனமே — சவாலாக நீ இதை ஏற்று
இலட்சியப்பாதைதனை இறுமாப்புடன் சென்றடைவாய்.

வெ. யூஜின்
அங், எண் A/10

பாதுகாவலன்
PATHUKAVALAN

# சமூகத்தொடர்பு, கல்விக்கு ஆசிய ஆயர்கள் முக்கியத்துவம்

## துறவி கட்டிய புயற்காப்பு

(யூக்கன் செய்தி)

தெற்கு வங்களத்தில் புயற்காற்றுகள் புதியனவல்ல. ஏப்பிரல் 29 ஆம் திகதி வீசியகடும் புயலினால் 150,000 பேர் இறந்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இரு வாரங்களில் வீசிய ஐந்து புயற்காற்றுகளால் மிகக் கொடிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன

1960 இலும் இது போன்ற ஒரு புயல் சிட்டகாங் மாநிலத்தைத் தாக்கியது. இதனால் அநேகர் உயிரிழந்ததுடன் பலர் அங்கமிழந்து, வீடிழந்து அல்லலுற்றனர்.

அப்போது திருச்சிலுவை சபையைச் சேர்ந்த சகோதரர் லப்லன்டா என்பவர் டியாங் பஹாார் என்னுமிடத்தில் ஓர் துறவற மடத்தை நடத்திவந்தார் புயற்காற்றின் கொடூரத்தைக் கண்ட அவர் ஷமிபூரிலுள்ள ஏழை மீனவர்களுக்கு ஓர் புயற்காப்பு அமைப்பதற்கு விரும்பினார். நன்கொடையாகக் கிடைத்த ஒரு காணியில் அவர் இரண்டு மாடி கொண்ட 100 அடி நீளமான காப்பு அரணை அமைத்தார். காணியை அளித்தவரான தாஸ் குடும்பத்தினர் அதிற் தங்கி அதனைப் பாதுகாத்து வருகின்றனர்.

இவ்வாண்டு ஏற்பட்ட புயலின் போது 400 பேர் இந்த புயற்காப்பில் பாதுகாக்கப் பட்டனர்.

அடுத்த மூன்று ஆண்டுகளுக்கும் ஆசிய ஆயர் பேரவையின் கூட்டமைப்பு தனது செயற்பாடுகளில் சமூகத் தொடர்பு, கல்வி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கத் திட்டமிட்டுள்ளது.

கூட்டமைப்பின் செயற்குழு அங்கத்தவர்கள் ஒன்று கூடி தத்தம் செயற்பாட்டுத் துறைகளில் மூன்று ஆண்டுகளுக்குரிய ஓர் செயற்பாட்டுத் திட்டத்தை வகுக்கவிருக்கின்றனர்.

சமூகத்தொடர்புத் துறையில் வெரித்றாஸ் வானொலி பதினாறு மொழிகளில் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகிறது. இவை இன்னும் விரிவுபடுத்தப்படும்.

ஒவ்வொரு துறையும் எதிர்காலத்துக்குத் திட்டமிடுகையில் தனக்கு ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையும் பின்னடைவுகளையும் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கிறது. இவை ஆய்வு செய்யப்பட்டு ஆயர் கூட்டமைப்பின் விரிவாக்கப்பட்ட இலக்குகளுக்கு ஏற்ற வழிவகைகள் கண்டுபிடிக்க முயற்சி எடுக்கப்படும்.

அத்துடன் பிற கிறிஸ்தவர்கள், பிறமதத்தினர் ஆகிய அனைத்து ஆசியர்களுடைய ஒத்துழைப்பையும் பெற முயற்சிகள் எடுக்கப்படும்.

## நற்பிரசைகளை உருவாக்குவதே கத்தோலிக்க ஆசிரியரின் நோக்கம்

(யூக்கன் செய்தி)

கத்தோலிக்க பாடசாலைகளின் நோக்கம் நற்பிரசைகளை உருவாக்குவது என ஹொங் கொங்கில் நடைபெற்ற ஆய்வரங்கொன்றில் கலந்து கொண்ட 622 ஆசிரியருள் 99 வீதமானவர்கள் கருத்துத் தெரிவித்தனர். பங்குபற்றியோரில் 90 வீதமானவர்கள் பொதுநிலையினராவர்.

இவர்கள் நற்பிரசைகளை உருவாக்குவதற்கு அவர்களுக்கு அறிவூட்டுவதும், அனைவரும் கல்வியறிவு பெறச் செய்வதுமே முதன்மையான நோக்கங்கள் எனக் கருதினர். நற்செய்தி பரப்புதலும் மறைக்கல்வி பயிற்றுதலும் மூன்றாம் நான்காம் இடத்தைப் பெற்றன.

ஆசிரியர்கள் முன்மாதிரியான வாழ்க்கை நடத்துவதும் பாடசாலைகளில் சமய செயற்பாடுகளை நடத்துவதும் நற்செய்திப் பணிக்குத் துணை புரியும் என அநேகர் கருதினர்.

ஹொங் கொங் மறைமாவட்டத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவையொட்டியே இந்த ஆய்வரங்கு நடைபெற்றது.

## கோவை ஆலயத்தின் 425வது ஆண்டு நிறைவு

(யூக்கன் செய்தி)

கோவாவிலுள்ள ஓர் ஆலயம் அண்மையில் தனது 425வது ஆண்டு நிறைவையும் அங்கு நடைபெற்ற முதல் ஞானஸ்நானத்தின் 425வது ஆண்டு நிறைவையும் கொண்டாடியது. இதற்கு வருகை தந்த ஆயர் இக்நேஷியஸ் லொபோ விழாவுக்கு வந்த போது ஆதியில் யேசுசபைக் குருக்கள் வந்ததுபோல சுவாரி ஆற்றில் ஒரு படகிலேறி கிராமத்துக்கு வந்து சேர்ந்தார் நவநாட்கள், உறுதிப்பூசுதல் கலாசார நிகழ்ச்சிகள் ஆகியன விழாவில் இடம்பெற்றன.

மலைகள், நெல்வயல்களுக்கிடையில் அமைந்துள்ள இவ்வாலயம் உயர்ந்த கோபுரங்கள் தூபிகள், பாரிய கதவுகளுடன் மிகப் பழமையான பாணியில் கட்டப்பட்டுள்ளது. பங்கில் 8000 மக்கள் உள்ளனர்.

## கத்தோலிக்க பாடசாலைகள் பற்றி பெற்றோர் கவலை

மேற்குத்தீமோரிலுள்ள கத்தோலிக்க பெற்றோர் பலர் தமது பிள்ளைகளை நல்ல பாடசாலைகளுக்கு அனுப்புவதில் கஸ்டத்தை எதிர்நோக்குகின்றனர். கத்தோலிக்க பாடசாலைகளின் சூழலில் பிள்ளைகள் வளர்வதுதான் சிறந்தது என்று அவர்கள் கருதினாலும் அங்குள்ள கத்தோலிக்க பாடசாலைகளின் தரக்குறைவினாலும் மிகுதியான கட்டணத்தினாலும் அநேகர் தமதுபிள்ளைகளை அரசாங்க பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டி இருக்கின்றது. 1970 ஆம் ஆண்டு முதல் கத்தோலிக்க பாடசாலைகள் அரசாங்க நிதியுதவியின் மூலமே பெரிதும் நடைபெற்று வந்துள்ளன. அங்குள்ள கத்தோலிக்க ஆசிரியர்களுள் பலர் அரசாங்கத்திடமிருந்து சம்பளம் பெறுகின்றனர். கத்தோலிக்கர் பெரும்பாலாக வாழும் இப்பிரதேசத்தில் அரசாங்க பாடசாலைகளில் உள்ள ஆசிரியரில் பெரும்பாலானோர் கத்தோலிக்கர். அங்கும் சமயக் கல்வி அளிக்கப்படுகின்றது. ஆகவே தமது பிள்ளைகளை அரசாங்கப்பாடசாலைகளுக்கு அனுப்புவதில் பிரச்சனை ஒன்றும் இல்லை என்று பல கத்தோலிக்கர் கருதுகின்றனர்.

## நல்ல மனை...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனது கணவனின் வயோதிபத்தில் அவனுக்குப் பணிந்து, பணிவிடை புரியும் ஒரு நல் மனையாளாக இருக்க வேண்டும்.

குடும்பத்தின் அகல் விளக்காக ஒளிர்பவள் மனையாள். எனவே அவளிடம் இறைபக்தி இருக்கவேண்டும். உண்மையான இறைபக்தி அவளிடம் இருக்குமானால், அது அவளின் குடும்பத்தின் மலர்ச்சியிலே தெரியும். குடும்பத்தில் இறைபக்தியை ஊட்டும் முக்கிய கருவியாக மனையாள் திகழுகின்றாள்.

எனவே மனையாள் இப்பண்புகளை தனது இல்லற வாழ்க்கைக்கு ஏற்ற பண்புகளாக ஏற்று ஒழுகும் போது அவள் ஓர் சுடர் வீசும் ஒளி விளக்காகத் திகழுகின்றாள்.

## மறைப்பணி...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை தொடர்ந்து செல்லுங்கள் என்றார் கொலம்பஸ். விடாமுயற்சி, மனவலிமை, இறுதியில் கண்டனர் வெற்றி.

சக்திக்கு நம்மிடம் பஞ்சமில்லை. அதைப் பயன்படுத்த மனவலிமைதான் இல்லை. பொருளுக்குக் குறைவில்லை. அதை இதற்குச் செலவழிக்க மனமில்லை. ஓடும் ஆற்றோடு நீச்சலடிக்கத் தயங்கோம். எதிர்த்து நீச்சலடிக்க மனவலிமை தேவை.

அநேகச் சமயங்களில் காயீனுடைய பதிலையே நாம் இறைவனுக்குக் கூறுகிறோம். ''என் சகோதரனுக்கு நான் என்ன காவலாளியா.'' பிறர் நலனில் ஈடுபட அஞ்சுகிறோம். அதில் ஏதாவது உலக ஆதாயம் உண்டென்றால்தான் ஈடுபடுகிறோம்.

சில மாதங்களுக்கு முன் ஒரு நண்பர் என்னிடம் ''நண்பா! அனைத்தையும் இழந்து. அல்லல்பட்டு, உதவ யாருமின்றி வந்த ஒரு பெண்ணை நான் ஆதரித்து, எனது வீட்டில் வைத்து உணவளித்து, பின் சில நாளுக்குப் பின் அப்பெண்ணை ஒரு அலுவலகத்தில் (அரச அலுவலகம்) வேலை பார்க்கவும் உதவி செய்தேன். வேலை கிடைத்தவுடன் அப்பெண் என்னையும் என் குடும்பத்தையும் மறந்தாள். ஒரு மாதத்திற்குப் பின் தான் ஒரு உதவி கேட்டு அலுவலகத்திற்குச் செல்லுகையில் அவள் எனக்கு உதவுவாள் என நினைத்தேன். ஆனால் பணத்தையும் பதவியையும் கண்டவுடன் 'எனக்கு இவர்களைத் தெரியாதே எப்படி இவர்களுக்கு நான் இவ்வுதவியைச் செய்வது' என்று பல வாறாகப் பேசத் தொடங்கினாள். இதைக் கண்ட மக்கள் பலர் 'ஏன் அப்பெண்ணின் காரியத்தில் ஈடுபட்டீர்கள்?? என்று அவனைக் கடிந்து கொண்டனர். அதற்கு அவன் உழைத்து ஊதியத்தை இழப்பது தவறன்று: உழைக்காதிருப்பதே தவறு' எனக் கூறியதாக என்னிடம் கூறினான்.

நமது அன்புச் செயல்கள் தோல்வியுற்றாலும் அன்பு தோல்வியடைவதில்லை. 'தனித்து நிற்பது, தன்னையே நினைப்பது' என்ற குறிக்கோளுடைய சமுதாயத்தில் பிறருக்கு அன்பு செய்வதில் ஏற்படும் இன்னல்களை ஏற்கத் தயாராக உள்ள வலிமை உள்ளங்கள் சொற்பமே.

மறைப்பணி ஒரு கலை. கலைக்குப் பயிற்சி இன்றியமையாதது. இருதயத்தைத் திறக்கவும் தெரிய வேண்டும், மூடவும் தெரிய வேண்டும் பேசவும் அறியவேண்டும். மௌனமாயிருக்கவும் அறிய வேண்டும். பழிச் சொல்லையும், இழிச்சொல்லையும் ஏற்கவும், பசியையும், களைப்பையும் தாங்கவும் சக்தி வேண்டும் அவற்றைக் கண்டு அஞ்சாதீர்கள். முன்னின்று உழைப்பவர்களுக்குத் தடையாயிருக்காமல் உதவியாயிருங்கள். அவர்களை ஆதரியுங்கள். அத்துடன் நீங்களும் மனவலிமையோடு முன்வாருங்கள் நாட்டுப் பிரச்சனையைக் காரணம் காட்டாதீர்கள். மனஉறுதியோடு மறைப்பணி புரிய உங்களைத் தியாகம் செய்யுங்கள். எட்டுத் திசைக்கும் அன்புப்பணி அறிவிக்கப்படட்டும்.'' முன்வாருங்கள். புணியாற்றுங்கள்!

— ப ஞானராஜ்
மடுமாதா சிறிய குருமடம்,
மன்னார்.

## செயலும் சிந்தனையும்

எவ்வாறு நூலைச் சேலையாக நெய்யுமுன்னர் அதைச் சீர்ப்படுத்துகின்றாமோ அதே போன்று, இளமையிலேயே எமது பழக்கங்களையும் சீர்ப்படுத்த வேண்டும்.

### மரண ஞாபக அறிவித்தல்

ஆவணி — 17

புறுனோ கிறிஸ்ரி (கீதம்) அந்தோனிப்பிள்ளை
3 ஆம் ஆண்டு நினைவுத் திருப்பலி.
பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம், காலை 6–15.
தந்தை, சகோதரர், பேத்தி, உறவினர்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QB/1001/58/81